சே.வெ.எண்:18-2020 நாள்:09.06.2020

**விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (09.06.2020) விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட பெரியசெவலை ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாய விலை கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இதில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச அரிசியில் எடை குறைவாக உள்ளதை கண்டறிந்து அதனை நியாய விலை கடையில் உள்ள எடைத்தராசின் மீது வைத்து அளவினை சாரிபார்க்கும் போது 70 கிலோவிற்கு 64.840 கிலோ கிரோம் உள்ளதை அறிந்து மாவட்ட ஆட்சியர் உடனடியாக நியாய விலை கடை பணியாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க சம்மந்தபட்ட அலுவலருக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து பெரியசெவலை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும், முகக்கவசம் அணிய வேண்டும் மற்றும் பணிநேரத்தில் பணியாளர்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து பாவந்தூர் ஊராட்சியில் காமாட்சியம்மன் கோவில் குளத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் நடைபெற்றுவருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ஆனத்தூர் ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.29.70 இலட்சம் மதிப்பீட்டில் ஏரி தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இறுதியாக ஆனத்தூர் ஊராட்சியில் பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.